## சுருக்கம்

பள்ளிகள் – சென்னை மாநகராட்சி பள்ளிகள் – சென்னை பள்ளிகள் – பெயர் மாற்றம் - ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (எஸ்2) துறை**

அரசாணை (நிலை)எண் 191 நாள் 12.07.2010

திருவள்ளுவர் ஆண்டு 2041, ஆனி-28

படிக்கப்பட்டவை:-

1) சென்னை மாநகராட்சி நிதி நிலை அறிக்கை 2010-2011
2) சென்னை மாநகராட்சி ஆணையின் கடிதம் க.து.ந.க.எண்.பி3/3206/2010, நாள் 29.03.2010 மற்றும் 15.06.2010

***ஆணை:-***

சென்னை மாநராட்சியின் 2010-2011 நிதிநிலை அறிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தொடக்க உரையில் சென்னை மாநகராட்சி பள்ளிகளை தனியார் பள்ளிகளுக்கு இணையான தரமான பள்ளிகளாக தரத்தை உயர்த்த ஏதுவாக சென்னை மாநகராட்சி பள்ளிகள் இனிவரும் காலங்களில் சென்னை தொடக்கப் பள்ளிகள், சென்னை நடுநிலைப் பள்ளிகள், சென்னை உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் சென்னை மேல்நிலைப் பள்ளிகள் என அழைக்கப்படும் என தெரிவித்துள்ளார். இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் இனிவரும் காலங்களில் சென்னை மாநகராட்சிப் பள்ளிகள் பெயர் மாற்றம் செய்யப்பட்டு சென்னை தொடக்கப் பள்ளிகள், சென்னை நடுநிலைப் பள்ளிகள், சென்னை உயர்நிலைப் பள்ளிகள், சென்னை மேல்ந□லைப் பள்ளிகள் மற்றும் சென்னை மழலையர் பள்ளிகள் என பெயர் மாற்றம் செய்ததற்கு பின்னேற்பு வழங்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் மேலே 2-ல் படிக்கப்பட்ட தமது கடிதத்தில் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துரு அரசு பரிசீலனை செய்தது. சென்னை மாநகராட்சி ஆணையரின் கோரிக்கையினை ஏற்று சென்னை மாநகராட்சி பள்ளிகள் மேலே பத்தி 1-இல் குறிப்பிட்டுள்ளவாறு சென்னை தொடக்கப் பள்ளிகள், சென்னை நடுநிலைப் பள்ளிகள், சென்னை உயர்நிலைப் பள்ளிகள், சென்னை மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் சென்னை மழலையர் பள்ளிகள் என பெயர் மாற்றம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சி ஆணையரின் செயலுக்கு பின்னேற்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

1. ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-3
2. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9
3. அனைத்து மாநகராட்சிகள் (கோவை, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி)
4. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5
5. மாநில கணக்காயர், சென்னை-15/18

**நகல்**

பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9 (அனைத்து பிரிவுகள்)
மாவட்ட ஆட்சியர், சென்னை-1
இயக்குநர், கருவூல கணக்குகள், சென்னை-15

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்